Date. 05.06.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.58/2021**

**வா.சா.1**

**பெயர். திரு.வெங்கட்ராமன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் காரைக்காலிருந்து வருகிறேன். என்னுடைய மனைவி என்னுடன் தான் வசித்து வருகிறார். என் மனைவிக்கு கர்ப்பபை கோளாறு மற்றும் வெரிக்கோஸ் வெயின் பிரச்சனை உள்ளது. இது போன்று பிரச்சனை உள்ளதால் தான் அவரால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியவில்லை என்று ஏற்கனவே தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு 07/06/ 1989 ம் ஆண்டு திருமணம் ஆனது. அதற்கு முன்பு அந்த குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். 3 ம் பிரதிவாதி எனது மனைவியின் இளைய சகோதரி ஆவார். 1, 2 பிரதிவாதிகள் ஆகிய இருவரும் எனது மனைவியின் சகோதரர்கள் ஆவார்கள்.

**<u>குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.</u>**